**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 843/2022**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மங்கம்மாள்** | Caste | : |
| Father Name/ Husband Name | : **அடைக்கலம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(21.07.2025)**
**முதல் விசாரணை**

நான் நல்லூர் ஆணைக்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகள் 4 பேரும் எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு எனக்கு சொந்தமான வயக்காட்டில் எனது கணவர் தண்ணீர் பாய்த்துவிட்டு திரும்ப வரும் போது இரவு 8 மணியளவில் ஆஜர் எதிரிகளும் 4 பேரும் எழியார்பத்தி மெயின்ரோட்டில் மது அருந்திக்கொண்டு இருந்தார்கள் என்றும் எனது கணவர் கொஞ்சம் தள்ளி குடியுங்கள் என சொல்லியதற்கு எதிரிகள் 4 பேரும் சேர்ந்து எனது கணவர் அ.சா.1 ஐ இடது கையில் அடித்து ஒடித்துவிட்டார்கள். கத்தியால் எனது கணவரை கீழ் தாடையில் அடித்துவிட்டார்கள். உடம்பில் ஆங்காங்கே அடித்துவிட்டார்கள். எங்களது தோட்டத்திற்கும் எங்களது வீட்டிற்கும் சுமார் 1கி.மீ இருக்கும். எனதுஅம்மாச்சி அய்யம்மாள் மேற்படி தோட்டத்தில் கணவருடன் இருந்தார். சம்பவத்தை நேரில் பார்த்த அய்யம்மாள் பதறி அடித்துக்கொண்டு வீட்டில் இருந்த எங்களிடம் சம்பவத்தை பற்றி கூறினார். நாங்கள் சென்று எனது கணவரை கூட்டிக்கொண்டு பெருங்குடி காவல் நிலையம் சென்று

போலிசாரிடம் கூறிவிட்டு மதுரை ராஜாஜி மருத்துவமனையில் எனது கணவரை சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு 1 மாதம் எனது கணவர் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது கணவர் என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி அய்யம்மாள் சொல்லி தான் தெரியும். அ.சா.2, 3 எனது உறவினர்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் எனக்கு சொந்தமா என்றால் இல்லை. ஆஜர் 1 மற்றும் 2 எதிரிகளுக்கும் எனது கணவருக்கும் ஊர்க்கோவில் பூசாரி முறையில் பிரச்சினை உள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவயிடத்திற்கும் எனது வீட்டிற்கும் சுமார் 1 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த பின்பு நானும் எனது கணவரும் நேரடியாக காவல் நிலையம் சென்றுவிட்டு புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு எந்த வண்டியில் சென்றோம் என்றால் எனக்கு பதற்றத்தில் ஞாபகம் இல்லை. மருத்துவமனைக்கு நானும் எனது தம்பி திருமாலும் சென்றோம். நாங்கள் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் சுமார் 9.30 மணிக்கு மேல் இருக்கும். புகார் கொடுத்தற்கு பின்பு போலிசார் விசாரித்தார்களா என்றால் நாங்கள் இருந்த நிலையில் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் எனது கணவர் மோட்டார் சைக்கிளில் இருந்து கீழே விழுந்த காயத்தை எதிரிகள் மீது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC. 843/2022**

**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியான் | Caste | : |
| Father Name/ Husband Name | : முத்தையா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(21.07.2025)**
**முதல் விசாரணை**

நான் தவத்தநேந்தல் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 அடைக்கலம் எனது பெரியப்பா ஆவார். ஆஜர் எதிரிகள் 4 பேரையும் எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இரவு 8 மணியளவில் எனது பெரியப்பா அ.சா.1 அடைக்கலம் அவரது வயக்காட்டில் தண்ணீர் பாய்த்துவிட்டு திரும்ப வரும் போது ஆஜர் எதிரிகள் 4 பேரும் பாதையில் உட்கார்ந்து மதுஅருந்திக் கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சற்றுதள்ளி உட்காருமாறு எனது பெரியப்பா அ.சா.1 சொன்னதற்கு 4 பேரும் எனது பெரியப்பாவை அடித்து எனது பெரியப்பாவின் இடது கையை உடைத்துவிட்டார்கள். பின்பு ஆங்காங்கே எனது பெரியப்பாவிற்கு ஊமைக்காயம் ஏற்பட்டு இருந்தது. எனது அம்மாச்சி வீராயி எனக்கு போன் செய்து தகவல் கூறினார். நான் மறுநாள் காலை அரசு ராஜாஜி மருத்துவமனை சென்று எனது பெரியப்பாவை பார்த்தேன். வழக்கு தொடர்பாக எனது பெரியப்பா புகார் கொடுத்தார்.அந்த புகார் அ.சா.ஆ.1 ல் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். அந்த

சாட்சிக் கையெழுத்து அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனது பெரியப்பா என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவம் பற்றி யார் சொன்னார்கள் என்றால் எனது அம்மாச்சி வீராயி சொன்னார். அ.சா.2,3,4 ஆகியோர்கள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளுக்கும் எனது பெரியப்பாவிற்கும் கோவில் பூசாரி சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்தயிடத்திற்கும் எனது ஊருக்கும் எவ்வளவு தொலைவு என்றால் 8 முதல் 9 கி.மீ இருக்கும். நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். நான் மருத்துவமனைக்கு செல்லும் முன்பே எனது பெரியப்பா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையில் இருந்தார். புகார் மனுவில் உள்ள அறிவேன் சாட்சி எனது கையெழுத்து தான். புகார்மனுவை படித்து பார்த்து கையெழுத்து போட்டேன் என்றால் எனக்கு படிக்க தெரியாது. கையெழுத்தை நான் மருத்துவமனையில் வைத்து தான் போட்டேன். நான் கையெழுத்தை யார் விசாரித்து கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும் எங்கு வைத்து போட்டேன் என்றாலும் பெருங்குடி போலிசார் விசாரித்து மருத்துவமனையில் வைத்து வாங்கினார்கள். என்னிடம் போலிசார் மதியம் 12 மணிக்கு கையெழுத்து வாங்கினார்கள். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும் அ.சா.1 பெரியப்பா என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் எழுதிக்கொடுத்ததின் பேரில் தான் எழுதப்பட்ட பேப்பரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.